



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 265 19.03.2026 THURSDAY PANGUNI: 5 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 265 19.03.2026 வியாழக்கிழமை பங்குனி : 5 விலை : ரூ.5/–


## அரசியலில்

# "முற்றுப்புள்ளி என்பதே இல்லை"

## பிரதமர் மோடி பேச்சு

டெல்லி, மார்ச்.19-

ராஜ்யசபாவில் பதவிக்காலம் முடிந்து, ஓய்வு பெறும் எம்பிக்களை பிரதமர் மோடி பாராட்டினார். அப்போது அவர், ''அரசியலில் முற்றுப்புள்ளி என்பதே இல்லை'' என தெரிவித்தார்.

ராஜ்யசபாவில் பிரதமர் மோடி பேசியதாவது: அவையில் பல்வேறு பிரச்னைகள் குறித்து விவாதங்கள் நடைபெறுகிறது. அவற்றில் ஒவ்வொரு எம்பிக்களும் தனித்துவமான பங்கு உண்டு. தங்களது பதவிக்காலத்தை நிறைவு செய்து அவையை விட்டு வெளியேறும் எம்பிக்களிடம் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஓய்வு பெறும் எம்பிக்களின் அனுபவம் பொது வாழ்க்கைக்கு தொடர்ந்து வழிகாட்டும்.



அரசியல் பயணம் என்பது என்றும் தொடரக்கூடியது, அதற்கு முற்றுப்புள்ளி என்பதே கிடையாதுதேவ கவுடா, மல்லிகார்ஜுன கார்கே மற்றும் சரத் பவார் போன்ற மூத்த தலைவர்கள் தங்கள் வாழ்நாளின் பெரும்பாலான நாட்களை பார்லிமென்ட் சேவைக்காக அர்ப்பணித்துள்ளனர். அனைத்து புதிய பார்லிமென்ட் எம்பிக்களும் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

அர்ப்பணிப்புடன் அவைக்கு வந்து, சமூகத்தின் மீதான பொறுப்புகளை நிறைவேற்றுவது ஆகியவை மூத்த எம்பிக்களின் குணங்களாகும். அவர்களின் பங்களிப்பை நான் பாராட்டுகிறேன். ராஜ்யாசபா துணைத் தலைவர் ஹரிவன்ஷ் நாராயண் சிங், அவை நடவடிக்கைகளை அமைதியாகவும், பாரபட்சமின்றியும் நடத்தி உள்ளார்.

ஹரிவன்ஷ் நீண்ட காலமாக அவையில் பொறுப்புகளை ஏற்கும் வாய்ப்பைப் பெற்றார். அவர் எழுதுவதில் திறமையானவர் மட்டுமல்ல, கடின உழைப்பாளியும் கூட. அவர் நாடு முழுவதும் பயணம் செய்து தனது கடமைகளை விடாமுயற்சியுடன் நிறைவேற்றியுள்ளார். பார்லிமென்டின் கண்ணியத்தைக் காக்குமாறும், அனுபவம் வாய்ந்த எம்பிக்களிடம் உத்வேகம் பெறுமாறும் புதிய எம்பிக்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

ஜனநாயக மரபுகளை வலுப்படுத்துவதற்கு அவர்களின் வழிகாட்டுதல் இன்றியமையாதது. ஒரு காலத்தில் இந்த அவை அதன் கலகலப்பான நகைச்சுவை மற்றும் நையாண்டிக்குப் பெயர் பெற்றிருந்தது. ஆனால் தற்போது அத்தகைய தருணங்கள் குறைந்து வருகிறது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.



## திமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கீடு

சென்னை: மார்ச்.18-

திமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரும் ஏப்ரல் 23ம் தேதி நடைபெறவிருக்கிறது. மே.4ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கட்சிகள் கூட்டணிப் பேச்சுவார்த்தைகள், தொகுதிப் பங்கீடுகள் என்று பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

திமுகவில் இதுவரை காங்கிரஸ் கட்சிக்கு 28 தொகுதிகள், மதிமுகவுக்கு 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு 2, கொமதேகவுக்கு 2 தொகுதிகள், மனிதநேய மக்கள் கட்சிக்கு 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்ட நிலையில் இன்று (மார்ச்.18) இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் தொகுதிப் பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தொகுதிப் பங்கீடு இறுதியானதை அடுத்து செய்தியாளர்களை சந்தித்த மு.வீரபாண்டியன், "கடந்த முறையைவிட இத்தேர்தலில் எங்களுக்கு கூடுதல் இடங்கள் வேண்டும் என்று திமுகவிடம் கோரினோம். ஆனால் 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெரியண்ணன் மனப்பாண்மையில் திமுக ஒருபோதும் நடந்தது இல்லை. தொகுதிப் பங்கீடு விவகாரத்தில் திமுக நிர்பந்திக்கவில்லை. கட்டளையிடவில்லை. அழுத்தம் தரவில்லை. மாறாக கூட்டணியில் இன்னும் சில கட்சிகள் இணைந்துள்ளதால் தொகுதிகள் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ள கோரிக்கை வைத்தனர். அதன் அடிப்படையில் 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலில் ஒற்றுமையை சீர்குலைக்க நினைக்கும் பாஜகவை வீழ்த்த வேண்டும் என்பதால் ஓரணியில் சேர்ந்துள்ளோம்." என்றார்.

## பிடிஆர் தொகுதியில் அதிமுகவா, அமமுகவா? ஆர்வமாக எதிர்பார்க்கும் திமுகவினர்

மதுரை: மார்ச்.19-

மதுரை மத்திய தொகுதியில் அதிமுகவா, அமமுகவா? யார் போட்டியிடப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு, திமுக கூட்டணி யினரிடையே அதிகமாக உள்ளது.

மதுரை மத்திய தொகுதியில் மூன்றாவது முறையாக திமுகவில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் களம் இறங்குவது உறுதியாகி விட்டது. அதனால், தொகுதி முழுவதும் அமைச்சர், தனது ஆதரவாளர்களை களம் இறக்கி தேர்தல் பணிகளை தொடங்கி விட்டார்.

அவர் கடந்த காலங்களைப்போல் இல்லாமல் வாக்காளர்களின் எதிர்பார்ப்புகளை இந்த முறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பூர்த்திசெய்ய இருப்பதாகக் கூறுகிறார்கள். அதற்கு முன்னோட்டமாகத்தான் அவர், தொகுதி முழுவதும் பிளாஸ்டிக் நாற்காலிகளை வழங்கியதாகக் கூறப்படுகிறது.



பழனிவேல் தியாகராஜனை எதிர்த்து மத்திய தொகுதியில் அதிமுக கூட்டணியில் போட்டிடுவது அதிமுகவா?, அமமுகவா? என்றும், யார் வேட்பாளராக போட்டியிடப் போகிறார்கள்? என்ற எதிர்பார்ப்பு அதிகம் உள்ளது. இதில் அதிமுக கூட்டணியைவிட திமுக கூட்டணியினரே மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். இதற்கு இத்தொகுதி திமுகவினரிடையே நிலவும் கோஷ்டிப் பூசலும் முக்கியக் காரணம்.

இதுகுறித்து அதிமுக முக்கிய நிர்வாகி ஒருவர் கூறியதாவது: அதிமுகவில் மத்திய தொகுதியில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பேராசிரியர் ஜெயபால், 85வது வட்டச் செயலாளர் ஜெயக்குமாரின் மனைவி கவுன்சிலர் முத்துமாரி, முன்னாள் துணைமேயர் பி.எம்.மன்னன் உள்ளிட்ட சிலரின் பெயர்கள் அடிபடுகின்றன. செல்லூர் கே.ராஜூவின் பரிந்துரை முத்துமாரிக்கே உள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதிமுக போட்டி யிட்டால் ஜெயபால் அல்லது பி.எம்.மன்னனை நிறுத்த கட்சித் தலைமை ஆலோசிப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், பி.எம்.மன்னன், சொந்தப் பணத்தை இறக்க மனமில்லாமல் அதிமுக ஆட்சியை பிடித்தால் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட்டு மாநகராட்சியில் முக்கியப் பதவி கேட்கலாம் என்ற மனநிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

அதனால், 'சீட்' பெறுவதற்கு பெரியளவில் ஆர்வம் காட்டவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால், பி.எம்.மன்னன், அமமுகவை சேர்ந்த டேவிட் அண்ணாதுரை போட்டியிட்டால் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கு கடும் போட்டியை தரலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. பி.எம்.மன்னன் போட்டியிட்டால் அவருக்கு திமுகவில் கோஷ்டியாக செயல்படுபவர்களின் ஆதரவு மறைமுகமாகக் கிடைக்கும் வாய்ப்புள்ளது. அதனால், அவர்கள் பி.எம்.மன்னனை போட்டியிட வைக்க பழைய கட்சிப் பாசத்தில் வலியுறுத்தி வருகிறார்கள், என்றனர்.

## தமிழகம், புதுச்சேரியில் ஒரே நாளில் தேர்தல் நடத்துங்கள் தேர்தல் ஆணையத்துக்கு திமுக கடிதம்

புதுச்சேரி, மார்ச்.19-

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலை தமிழகத்துடன் இணைத்து நடத்தக் கோரி தலைமைத் தேர்தல் ஆணையத்துக்கு திமுக கடிதம் அனுப்பியுள்ளது.




இதுதொடர்பாக புதுச்சேரி திமுக மாநில அமைப்பாளர்சிவா அனுப்பிய கடிதம்: வரலாற்று ரீதியாக, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பொதுத் தேர்தல்கள் பெரும்பாலும் ஒரே நாளில் நடத்தப் பட்டு வந்துள்ளன.

இந்த அணுகுமுறையிலிருந்து விலகுவதற்கான காரணங்களை கூற வேண்டும். தற்போதைய புதுச்சேரி சட்டப்பேரவை பதவிக்காலம் வரும் ஜூன் 15 வரை நீடிக்கும். இப்படியிருக்க, தேர்தல் அட்டவணையை முன்கூட்டியே நடத்துவதில் உள்ள அவசரம் குறித்து தெரிவிக்க வேண்டும்.

புதுச்சேரியில் உள்ள 30 தொகுதிகளில், 28 தொகுதிகள் புவியியல் ரீதியாகத் தமிழ்நாட்டுக்குள் அமைந்துள்ளன. இத்தகைய சூழ்நிலைகளில், இரண்டு வெவ்வேறு தேதிகளில் வாக்குப்பதிவை நடத்துவது, பிரச்சாரம் என்ற போர்வையில் வெளியாட்கள் நடமாடுவது, வாக்காளர் ஆள்மாறாட்ட அபாயங்கள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் உள்ளிட்ட சவால்களை உருவாக்கக்கூடும்.

புதுச்சேரிக்கு தமிழ்நாட்டின் வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 23ல் இணைத்து நடத்த வேண்டும். தமிழகத்தில் வேலை நாளாக வரும் ஏப்.9ம் தேதி புதுச்சேரி வாக்குப் பதிவை நடத்தினால், இங்கிருந்து தமிழகத்தில் பணி புரிவோருக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பை உறுதி செய்ய வேண்டும்.

வேட்பு மனுக்களை தாக்கல் செய்யப் போதுமான கால அவகாசம் தேவைப்படுகிறது. அதனால் வேட்பு மனு செயல்முறைக்கு நியாயமான காலஅட்டவணையை தரவேண்டும்.


விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000


## தேசிய ஜனநாயக கூட்டணியில் விரைவில் தொகுதிப் பங்கீடு : நயினார் நாகேந்திரன் தகவல்

திருநெல்வேலி, மார்ச்.19-

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் விரைவில் தொகுதிப் பங்கீடு நடைபெறும் என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் தனித்துப் போட்டியிடுவது அல்லது கூட்டணி வைப்பது என்பது அவர்களின் உரிமை. இதைப் பற்றி நான் ஏற்கனவே பலமுறை தெளிவுபடுத்தி விட்டேன். திமுக எப்படி கூட்டணி அமைத்து போட்டியிடுகிறதோ அதேபோல அவர்களும் ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். இதில் நான் கருத்துச் சொல்ல ஏதுமில்லை.



எவ்வளவு பெரிய பணபலம் இருந்தாலும், இந்தியாவை டாட்டாவோ பிர்லாவோ ஆள முடியாது. திமுகவிடம் 50,000 முதல் 60,000 கோடி ரூபாய் பணம் இருக்கலாம், ஆனால் மக்கள் மனம் யாரிடம் இருக்கிறது என்பதுதான் முக்கியம்.

5 ஆண்டுகளுக்கு முன் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. சொத்து வரி உயர்த்தப்படாது என்று கூறிவிட்டு 300 மடங்கு உயர்த்தியுள்ளனர். மின்கட்டணத்தை உயர்த்த மாட்டோம் என கூறிவிட்டு உயர்த்தி விட்டனர். மாதந்தோறும் மின் கணக்கெடுப்பு முறை இன்னமும் அமல்படுத்தப்படவில்லை.

தமிழகத்திற்கு சாலைகள் மற்றும் பாலங்கள் அமைப்பதற்காக மத்திய அரசு இதுவரை 14 லட்சம் கோடி ரூபாய் வழங்கியுள்ளது. ஆனால்,எதையுமே தரவில்லை என தமிழக அரசு பொய் கூறுகிறது.ரேஷன் கடைகளில் மத்திய அரசு இலவசமாக வழங்கும் பொருட்களுக்கு, மாநில அரசு தனது ஸ்டிக்கரை ஒட்டித் தங்களது திட்டம் போலக் காட்டி வருகிறது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளது.

தேர்தல் வேட்புமனுத் தாக்கலுக்கு இன்னும் 12 நாட்கள் அவகாசம் உள்ளது. பாஜகவின் தேர்தல் பொறுப்பாளர் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் சென்னை வரவுள்ளார். அவர் வந்தவுடன் தொகுதி பங்கீடு குறித்துப் பேசி இறுதி செய்யப்படும். அதிமுக உள்ளிட்ட கட்சிகளுடன் இணைந்து நாங்கள் ஒற்றுமையாகச் செயல்படுவோம் என்றார்.

தொகுதி மாறுவது குறித்த விமர்சனங்களுக்கு, வேட்புமனு தாக்கல் செய்த பின்பு இதற்கு பதில் சொல்கிறேன் என்று கூறினார்.

சர்வதேச அளவில் நிலவும் போர்ச் சூழலால் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இது திட்டமிட்டு நடத்தப்பட்டது அல்ல. இன்னும் 10 முதல் 15 நாட்களில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்று தெரிவித்தார்

# பசித்திருப்போம்... பகிர்ந்தளிப்போம்! புனித ரமலான் நன்னாளையொட்டி காயல் அப்பாஸ் வாழ்த்துச் செய்தி



காயல்பட்டினம் மார்ச் 19-

புனித ரமலான் மாதத்தை முன்னிட்டு, நோன்பு மற்றும் ஜக்காத் கடமைகளை நிறைவேற்றிய இஸ்லாமியப் பெருமக்களுக்கு மக்கள் எழுச்சி ஜனநாயகக் கட்சியின் மாநிலத் தலைவர் காயல் அப்பாஸ் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்,

"புனித ரமலான் மாதம் என்பது ஏக இறைவனான அல்லாஹுத்தஆலாவினால் இஸ்லாமியர்களுக்கு வழங்கப்பட்ட மிகப்பெரிய வெகுமதியாகும். ஆண்டு முழுவதும் இந்த மாதம் நீடிக்காதா என்று உம்மத்தினர் ஏங்கும் அளவிற்குச் சிறப்பு வாய்ந்த மாதமாக இது திகழ்கிறது."

*உள்ளத்தின் அழுக்கைப் போக்கும் நோன்பு:*

"ஒவ்வொரு மாதமும் நோன்பு நோற்பது உள்ளத்தின் அழுக்குகளையும், மன ஊசலாட்டங்களையும் நீக்கிவிடும் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். மனித உடலில் ரத்தம் போல் ஊடுருவும் ஷைத்தானின் செயல்களுக்குத் தடையாக, நோன்பு ஒரு கேடயமாகத் திகழ்கிறது."

*ஏழைகளின் பசி அறிதல்:*

"மார்க்கம் நோன்பை விதியாக்கி இருப்பதன் மிக முக்கிய நோக்கமே, பசித்திருப்பதன் மூலம் ஏழைகளின் நிலையை உணர்வதுதான். சகார் (Sahar) நேரத்தில் அளவுக்கதிகமாக உண்டு குடலை நிரப்பாமல், ஏழைகளுக்கு ஒப்பாகப் பசி உணர்வை அனுபவிப்பதில்தான் நோன்பின் முழுப்பலனும் கிடைக்கிறது."

*வாழ்த்துக்கள்:*

"புனிதமான ரமலான் மாதத்தில் இறையச்சத்துடன் நோன்பினையும், ஏழைகளுக்கான ஜக்காத் கடமையினையும் நிறைவேற்றிய அனைத்து இஸ்லாமியர்களுக்கும், மக்கள் எழுச்சி ஜனநாயகக் கட்சியின் சார்பில் இனிய ரமலான் நல்வாழ்த்துகளை உரித்த ாக்குகிறேன்." இவ்வாறு காயல் அப்பாஸ் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய எல்லைப் பகுதிகளில் இன மோதல்களை தூண்ட கிளர்ச்சியாளர்களுக்கு பயிற்சி அளித்த 7 வெளிநாட்டினர் கைது



புதுடெல்லிமார்ச்.19-

இந்திய எல்லைப் பகுதிகளில் இன மோதல்களை தூண்டும் வகையில் மியான்மர் கிளர்ச்சியாளர்களுக்கு பயிற்சி அளித்த வெளிநாட்டினர் 7 பேரை தேசிய புலவனாய்வு முகமை (என்ஐஏ) அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பாட்டியாலா ஹவுஸ் சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்ட அவர்களை மார்ச் 27ம் தேதி வரை என்ஐஏ காவலில் எடுத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இது குறித்து என்ஐஏ அதிகாரிகள் கூறியதாவது: பிடிபட்டவர்களில் 6 பேர் உக்ரைனை சேர்ந்தவர்கள், ஒருவர் அமெரிக்கர். இவர்கள் மியான்மரில் உள்ள கிளர்ச்சியாளர்களுக்கு பயிற்சி அளித்து எல்லையில் இன மோதல்களை தூண்ட திட்டமிட்டிருந்தனர். டெல்லி, லக்னோ மற்றும் கொல்கத்தா ஆகிய நகரங்களில் இருந்து இந்த 7 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் முறையான விசா மூலம் இந்தியா வந்தடைந்தாலும், பாதுகாக்கப்பட்ட பகுதியான மிசோரமுக்கு செல்லத் தேவையான முறையான அனுமதியைப் பெறாமல் அங்கு சென்றுள்ளனர். அங்கிருந்து எல்லை தாண்டி மியான்மருக்குள் நுழைந்து, அங்குள்ள இனவாத ஆயுதக் குழுக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேலும், இவர்கள் ஐரோப்பாவில் இருந்து பெருமளவிலான அதிநவீன ட்ரோன்களை இந்தியா வழியாக கடத்திச் சென்றுள்ளனர். இந்தியாவிலுள்ள பிரிவினைவாதக் குழுக்களுடன் தொடர்புடைய மியான்மர் கிளர்ச்சியாளர்களுக்கு இவர்கள் போர்ப் பயிற்சி அளித்ததும் விசாரணையில் அம்பலமானது.

கைது செய்யப்பட்டவர்கள் மீது சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் 18வது பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்குப் பின்னால் இருக்கும் வெளிநாட்டுச் சக்திகள் குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு என்ஐஏ அதிகாரிகள் கூறினர்.

# ஆப்கனின் காபூல் மருத்துவமனை மீது பாகிஸ்தான் தாக்குதல் 400 பேர் உயிரிழப்பு நடந்தது என்ன?



காபூல், மார்ச்.19-

ஆப்கானிஸ்தானில் உள்ள ஒரு மருத்துவமனை மீது பாகிஸ்தான் வான்வழித் தாக்குதல் நடத்தியதில் சுமார் 400 பேர் இறந்ததாக தலிபான் அரசு கூறியுள்ளது.

பாகிஸ்தானுக்கும் அதன் அண்டை நாடான ஆப்கானிஸ்தானுக்கும் இடையே சமீப காலமாக மோதல் நிலவி வருகிறது. பாகிஸ்தானில் தாக்குதல் நடத்தும் தீவிரவாத அமைப்புகளை கட்டுப்படுத்துமாறு தலிபான் அரசை பாகிஸ்தான் வலியுறுத்துகிறது. ஆனால் தீவிரவாத அமைப்புகளுக்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என தலிபான் அரசு மறுத்து வருகிறது. இந்நிலையில் காபூல் நகரில் உள்ள ஒரு மருத்துவமனை மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டது.

இது குறித்து ஆப்கானிஸ்தான் அரசின் துணை செய்தித் தொடர்பாளர் ஹம்துல்லா ஃபித்ரத் நேற்று கூறுகையில், ”காபூல் நகரில் போதைப்பொருள் மறுவாழ்வு மருத்துவமனை மீது திங்கட்கிழமை இரவு சுமார் 9 மணியளவில் பாகிஸ்தான் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில், 2,000 படுக்கைகள் கொண்ட அந்த மருத்துவமனையின் பெரும் பகுதி இடிந்ததில் சுமார் 400 பேர் உயிரிழந்தனர். சுமார் 250 பேர் காயம் அடைந்தனர்” என்றார்.

ஆப்கானிஸ்தான் அரசின் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் இந்த தாக்குதலை கண்டித்துள்ளார். இது மனிதகுலத்துக்கு எதிரான குற்றம் என்றும் அவர் சாடியுள்ளார்.

இது குறித்து பாகிஸ்தானின் தகவல் துறை அமைச்சர் அத்தாவுல்லா தாரார் கூறுகையில், ‘‘ஆப்கானிஸ்தானின் காபூல் மற்றும் கிழக்கு மாகாணமான நங்கர்ஹாரில் உள்ள ராணுவத் தளங்களை குறிவைத்து பாகிஸ்தான் ராணுவம் துல்லியமான வான்வழித் தாக்குதல்களை நடத்தியது. இதில் காபூலில் 2 இடங்களில் தொழில்நுட்ப ஆதரவு உள்கட்டமைப்பு மற்றும் வெடிமருந்து சேமிப்பு வசதிகள் அழிக்கப்பட்டன. காபூலில் எந்த மருத்துவமனையும் குறிவைக்கப்படவில்லை. தலிபான் குற்றச்சாட்டு ஆதாரமற்றது” என்றார்.

இந்தியா கண்டனம்: இந்த தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. ”இது ஒரு கோழைத்தனமான, மனசாட்சியற்ற வன்முறைச் செயல். ஒரு படுகொலையை ராணுவ நடவடிக்கையாக பாகிஸ்தான் சித்தரிக்க முயன்று வருகிறது” என்று இந்தியா கூறியுள்ளது.

# வண்ணங்களால் விழிப்புணர்வு... வாக்குகளால் ஜனநாயகம்! 100% வாக்குப்பதிவை நோக்கி திண்டுக்கல் மாவட்டம்



சின்னாளபட்டி மார்ச். 19-

சட்டமன்றத் தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில், திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பிரம்மாண்ட ரங்கோலி கோலப்போட்டிகள் நடைபெற்றன. மாவட்ட மகளிர் திட்ட இயக்குநரும், தேர்தல் விழிப்புணர்வு மண்டல அலுவலருமான எஸ்.சதீஸ்பாபு தலைமையில் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரி நிர்வாக அலுவலர் கணேசன் அனைவரையும் வரவேற்றார். மண்டல துணை வட்டாட்சியர் சௌந்திரபாண்டியன், தேர்தல் துணை வட்டாட்சியர் மூர்த்தி, வருவாய் ஆய்வாளர் சத்தியபிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வண்ணமயமான விழிப்புணர்வு:

ஆத்தூர் வட்டார மகளிர் திட்ட மேலாளர் ஹேமலதா தலைமையில் சுய உதவிக்குழுப் பெண்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் தனித்தனி குழுக்களாகப் பிரிந்து தேர்தல் விழிப்புணர்வு ரங்கோலிகளை வரைந்தனர். இப்போட்டியில் 84 மாணவர்கள் நேரடியாகப் பங்கேற்றுத் தங்கள் கைவண்ணத்தைக் காட்டினர். சுமார் 1600க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த ரங்கோலி ஓவியங்களைப் பார்வையிட்டு வாக்களிப்பதன் அவசியத்தை உணர்ந்தனர்.

மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் எஸ்.சதீஸ்பாபு பேசுகையில்: "முதல்முறை வாக்களிக்கப்போகும் கல்லூரி மாணவர்கள் தங்கள் ஜனநாயகக் கடமையை 100 சதவீதம் நிறைவேற்ற வேண்டும் என்பதே இத்தகைய போட்டிகளின் முக்கிய நோக்கம்." கல்லூரி நிர்வாக அலுவலர் கணேசன் பேசுகையில், "இந்த விழிப்புணர்வு 1600 மாணவர்களின் குடும்பங்களுக்கும் சென்றடையும்" எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்த்துறை பேராசிரியர் பா.இரா.கவிதா, உதவி பேராசிரியர்கள் புன்னியன், இளமாறன், கிராம நிர்வாக அலுவலர்கள் விஜயலெட்சுமி, அறிவழகன், குமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். நிறைவாக வட்டார மேலாளர் ஹேமலதா நன்றி கூறினார்.



# “தேர்தல் களம் காணும் விஜய்க்கு அய்யனார் அருள் கிடைக்குமா? மதுரையில் களைகட்டும் தவெகவின் ஆன்மீக அரசியல்!

அலங்காநல்லூர், மார்ச்.19-

2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் அவர்கள் அமோக வெற்றி பெற்று, தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்க வேண்டும் என்று மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள வலையப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ மஞ்சமலை அய்யனார் திருக்கோவிலில், தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் இந்தச் சிறப்புப் பூஜைகள் நடைபெற்றன. கட்சியின் வெற்றிக்காகவும், தலைவர் விஜய்யின் அரசியல் பயணத்திற்காகவும் அய்யனாருக்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டன.

இந்த பூஜையில் மதுரை மாநகர் வடக்கு மாவட்டசெயலாளர் விஜய் அன்பன் கல்லானை, புறநகர் மாவட்ட செயலாளர் விஷால்கிருஷ்ணா, மாவட்ட இணைச் செயலாளர் நடராஜ், ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சுவாமி தரிசனம்செய்தனர்.

இதில் மாவட்ட நிர்வாகி விக்னேஷ், ஒன்றிய செயலாளர் விஜய்ஹரிஷ், பேரூர்செயலாளர் தளபதிரஞ்சித்,வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் தனசேகர், கார்த்திக்.மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, பாலமேடு பேரூர் செயலாளர் புகழ், நிர்வாகிகள் ராமநாதன், முத்து,வெங்கடேஷ், ராஜாமணி,முருகேசன், சரத், மற்றும் மகளிரணி உட்பட கிளை நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.



■ தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தோரணமலைகடையம் சாலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., பறக்கும்படை நிலையான கண்காணிப்பு குழு அலுவலர்கள் வாகன சோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதை மேலாய்வு மேற்கொண்டார்.



# சென்னை போடி விரைவு ரயில் இனி வாரந்தோறும் 6 நாட்கள் இயக்கம்

சென்னை, மார்ச்.19-

கரூர் வழியாக சென்னை போடிநாயக்கனூர் சென்னை இடையே இதுவரை வாரத்துக்கு 3 நாட்கள் இயக்கப்பட்டு வந்த விரைவு ரயில், நாளை (மார்ச் 19) முதல் வாரத்துக்கு 6 நாட்கள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரல் போடிநாயக்கனூர் விரைவு ரயில் (20601) வாரந்தோறும் திங்கள், புதன், வெள்ளி ஆகிய 3 நாட்களிலும், போடிநாயக்கனூர் சென்னை சென்ட்ரல் விரைவு ரயில் (20602) வாரந்தோறும் செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆகிய நாட்களிலும் இயக்கப்பட்டன. இந்நிலையில், இந்த ரயில்கள் இனி வாரத்தோறும் சனிக்கிழமை தவிர்த்து மற்ற 6 நாட்களும் இயக்கப்படும்.

இதன்படி, சென்னை சென்ட்ரலில் இருந்து இரவு 10.30 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் காலை சேலம் அதிகாலை 2.55 மணி, நாமக்கல் 3.54 மணி, கரூர் 4.33 மணி, திண்டுக்கல் 5.47 மணி, போடிநாயக்கனூர் 8.50 மணிக்குச் சென்றடையும்.

இதேபோல, போடிநாயக்கனூரில் இருந்து இரவு 8.55 மணிக்குப் புறப்பட்டு திண்டுக்கல் இரவு 11.42, கரூர் மறுநாள் அதிகாலை 12.48, நாமக்கல் அதிகாலை 1.19, சேலம் அதிகாலை 2.20, சென்னை காலை 7.55 மணிக்குச் சென்றடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புளியங்குடி உட்கோட்டத்திற்கு புதிய டிஎஸ்பி

புளியங்குடி, மார்ச்.19-



புளியங்குடி உட்கோட்டத்தில் டிஎஸ்பியாக பணிபுரிந்த மீனாட்சிநாதன், திருவண்ணாமலை மாவட்டம் பகுதிக்கு மாற்றப்பட்ட நிலையில், திருவண்ணாமலையில் டிஎஸ்பியாக பணிபுரிந்த மதன், புளியங்குடி, கடையநல்லூர், சேந்தமரம் , சிவகிரி, வாசுதேவநல்லூர், சொக்கம்பட்டி காவல் நிலையங்களை உள்ளடக்கிய புளியங்குடி உட்கோட்டத்திற்கு புதிய டிஎஸ்பியாக மதன், நியமனம் செய்யப்பட்டார். வட்டார காவல் ஆய்வாளர்கள், அரசியல் பிரமுகர்கள், தொழில் அதிபரகள், வழக்கறிஞர்கள், சமூக ஆர்வலர்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# மீண்டும் ஒரு ‘வரலாற்று வெற்றி’ உறுதி: திமுக தேர்தல் அலுவலகம் திறந்து வைத்து ஒன்றிய செயலாளர் அதிரடி பேச்சு



சின்னாளபட்டி, மார்ச். 19-

ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆத்தூர் ஒன்றிய திமுக தேர்தல் அலுவலகத்தை ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் திறந்து வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் ஆத்தூர் தொகுதியின் பாதுகாவலரும், தென்பாண்டி சிங்கமுமான அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் திமுக சார்பாக போட்டியிடுகிறார். திமுகவினர் பம்பரம்போல் சுழன்று தேர்தல் பணியாற்றி வருகின்றனர். ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பாக போக்குவரத்து நகர் எதிரே ஒன்றிய திமுக தேர்தல் அலுவலகம் திறக்கப்பட்டது. தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்து ஒன்றிய திமுக நிர்வாகிகள் மத்தியில் பேசிய ஒன்றிய செயலாளர் முருகேசன், கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் வரலாறு காணாத வெற்றியை பெற்றார். அதுபோல இம்முறை நடைபெறும் 2026 சட்டமன்ற தேர்தலிலும் மீண்டும் ஒரு வரலாறு காணாத வெற்றியை பெற ஒன்றிய திமுக நிர்வாகிகள், பேரூர் கழக நிர்வாகிகள், கிளைக்கழக நிர்வாகிகள் பம்பரம் போல சுழன்றி தேர்தல் பணியில் அயராது உழைக்க வேண்டும் என்றார்;.

நிகழ்ச்சியில் ஒன்றிய திமுக துணை செயலாளர்கள் ஆலமரத்துப்பட்டி இராஜேந்திரன், எம்.சி.பாண்டியன், பொருளாளர் தொப்பம்பட்டி கருப்பையா, சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், முன்னாள் பேரூர் கழக செயலாளர்கள் அறிவழகன், மோகன்ராஜ், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்திபாரதிராஜா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் செட்டியபட்டி ராஜா, உலகநாதன், கலிக்கம்பட்டி கோமதி செல்வகுமார், அம்பாத்துரை சிவக்குமார், ஆலமரத்துப்பட்டி ஆறுமுகம், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், மில்மேடு கிளைச் செயலாளர் அருண்பாண்டியன், ராயல் சவுண்ட் சர்வீஸ் முருகானந்தம் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சர்ச்சை கருத்துக்கு வருத்தம் தெரிவித்தார் சி.வி.சண்முகம்



விழுப்புரம்., மார்ச்.19-

தமிழக அரசு கொண்டுவந்த 'உங்கள் கனவை சொல்லுங்கள்' திட்டத்தை விமர்சித்து சி.வி.சண்முகம் பேசிய கருத்துகள் சர்ச்சையாகின. இதற்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்த நிலையில் அவர் நேற்று வருத்தம் தெரிவித்தார்.

தமிழகத்தில் பாலியல் வன்கொடுமை அதிகரித்துள்ளதாகக் கூறி தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் விழுப்புரத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் பேசும்போது, 'திராவிட மாடல் அரசு' என்ற பெயரில், தமிழகத்தில் திமுக கொள்ளையடித்துள்ளது.

ஆட்சி முடிந்து போகும் போது உங்கள் கனவை சொல்லுங்கள் என முதல்வர் ஸ்டாலின் கேட்கிறார். 'எனக்கு நயன்தாரா வேண்டும், எனது கனவை நிறைவேற்றுவாரா..' 'நயன்தாராவை எனக்கு திருமணம் செய்து வையுங்கள்' என ஒருவர் கேட்பார், நிறைவேற்றுவாரா. இவ்வாறு அவர் பேசினார்.

இவரது இந்த சர்ச்சைக் கருத்துக்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியது. இதன்படி, திமுக துணை பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி., தமிழக காங்கிரஸ் தலைவர்செல்வப்பெருந்தகை, பாஜக மாநில துணைத் தலைவர் குஷ்பு, மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் பாலபாரதி, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவர் நாசர் உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்தனர்.

இதன் தொடர்ச்சியாக சி.வி.சண்முகத்தை கண்டித்து விழுப்புரத்தில் மகளிர் அமைப்பினர் நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு உருவ பொம்மையை எரித்தனர். அவர் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்து, தேர்தலில் போட்டியிட தடை விதிக்க வேண்டும் என்றனர்.

இந்நிலையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு சி.வி.சண்முகம் அளித்த தகவலில், "தவறுதலாக நயன்தாராவின் பெயர் உச்சரிக்கப்பட்டது. எந்த விதமான உள் நோக்கத்துடன் அவரது பெயரை நான் குறிப்பிடவில்லை. இதற்காக வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்" எனக் கூறியுள்ளார்.

# 'சிலிண்டரை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எரிவாயுவை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்'



புதுடெல்லி, மார்ச்.19-

சிலிண்டர்களை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் சுஜாதா சர்மா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள போரால் இந்தியாவில் எரிபொருள் நெருக்கடி கவலைக்குரிய விஷயமாகவே நீடிக்கிறது. எனினும், சமையல் எரிவாயு (எல்பிஜி) விநியோகம் தொடர்பாக பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை. அதேநேரம் எரிவாயுவை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். மாற்றாக, சமையலுக்கு மின்சாரம் உள்ளிட்ட இதர எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவது கூடுதல் நலம் பயக்கும்.

தற்போது எந்தவொரு விநியோகஸ்தரிடமும் கையிருப்பு இல்லாத நிலை ஏற்படவில்லை. வீடுகளுக்கான சிலிண்டர் விநியோகம் வழக்கம்போலவே நடைபெற்று வருகிறது. வணிக ரீதியிலான எல்பிஜி விநியோகம் தொடக்கத்தில் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தாலும், தற்போது பகுதி அளவில் சீரமைக்கப்பட்டுள்ளது. வணிகப் பயன்பாட்டாளர்கள் படிப்படியாகக் குழாய் வழி இயற்கை எரிவாயுவுக்கு மாற வேண்டும்.

எரிவாயு சிலிண்டர்களைப் பதுக்குபவர்கள் மற்றும் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த சில நாட்களில் நாடு முழுவதும் 12,000க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் சுமார் 15,000 சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு சுஜாதா தெரிவித்தார்.

# ஈரானின் 2வது மிகப் பெரிய தலைவர் அலி லாரிஜானி, மூத்த தளபதி சுலைமானி உயிரிழப்பு: இஸ்ரேல் பிரதமர் தகவல்





டெல் அவிவ், மார்ச்.19-

இஸ்ரேல் தாக்குதலில் ஈரானின் 2வது மிகப் பெரிய தலைவரான அலி லாரிஜானியும் மூத்த தளபதி கோலம்ரெசா சுலைமானியும் உயிரிழந்துவிட்டதாக கூறப்படுகிறது.

கடந்த பிப்.28ம் தேதி அமெரிக்கா, இஸ்ரேல் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து அவரது மகன் மோஜ்தபா காமேனி புதிய உச்ச தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனால் இஸ்ரேல் போர் விமான தாக்குதலில் மோஜ்தபா பலத்த காயமடைந்து கோமாவில் இருப்பதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன.இந்த சூழலில் மறைந்த அயத்துல்லா அலி காமேனியின் வலது கரமாக செயல்பட்ட அலி லாரிஜானி, ஈரானை வழிநடத்தி வந்ததாகக் கூறப்பட்டது. இந்த சூழலில் கடந்த திங்கள் கிழமை நள்ளிரவு முதல் செவ்வாய்க்கிழமை அதிகாலை வரை ஈரான் தலைநகர் டெஹ்ரானின் முக்கிய ராணுவ தளங்களை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின.இது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்ட வீடியோவில், "இஸ்ரேல் வான் வழி தாக்குதலில் அலி லாரிஜானி கொல்லப்பட்டுவிட்டார். இவர் இஸ்லாமிய புரட்சிகர படையின் தலைவராக இருந்தார். ஈரான் ராணுவத்தின் பசிஜ் படைத் தளபதி சுலைமானியும் கொல்லப்பட்டார். இந்த நேரத்தில் ஈரானின் ஆட்சியை பொதுமக்கள் கைப்பற்ற வேண்டும்" என்றார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு டெஹ்ரானில் நடைபெற்ற பேரணியில் அலி லாரிஜானி பங்கேற்றார். அப்போது முதல் அவரை தீவிரமாக கண்காணித்து, அவர் தங்கியிருந்த ராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் 300 ஈரான் ராணுவ வீரர்கள் உயிரிழந்திருப்பதாகவும் இஸ்ரேல் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. அலி லாரிஜானி, சுலைமானியின் உயிரிழப்பை ஈரான் அரசு உறுதி செய்யவில்லை.

# 226 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி நம்பிக்கை

கொல்கத்தா, மார்ச்.19-

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் 226 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம் என முதல்வர் மம்தா பானர்ஜி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் 294 தொகுதிகளுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23, 29 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அங்கு ஆளும் திரிணமூல் காங்கிரஸ், பாஜக இடையே நேரடிப் போட்டி நிலவுகிறது.



இந்நிலையில், ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் (டிஎம்சி) 291 வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சியின் தலைவரும் முதல்வருமான மம்தா பானர்ஜி கொல்கத்தாவில் நேற்று வெளியிட்டார்.

பின்னர் மம்தா பானர்ஜி செய்தியாளர்களிடம் கூறும்போது, "மொத்தம் உள்ள 294 இடங்களில், திரிணமுல் காங்கிரஸ் 291 இடங்களில் போட்டியிடுகிறது. மீதமுள்ள 3 இடங்கள் டார்ஜிலிங் மலைப் பகுதியில் அனித் தாபா தலைமையிலான பிஜிபிஎம் (ஙிநிறிவி) கூட்டணி கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. வேட்பாளர் பட்டியலில் இடம் கிடைக்காத தலைவர்கள் மற்றும் தொண்டர்களுக்கு கட்சியில் உரிய இடமும் பொறுப்பும் வழங்கப்படும்.

இந்தத் தேர்தலில் பாஜகவின் பலம் குறையும். அவர்களின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு தகுந்த பதிலடி கொடுப்பார்கள். எங்கள் கட்சி 226க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை தக்கவைக்கும்" என்றார்.

291 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலில் 52 பெண்கள், 95 எஸ்சி, எஸ்டி பிரிவினர், 47 சிறுபான்மையினர் இடம்பெற்றுள்ளனர். முதல்வர் மம்தா பானர்ஜி கடந்த முறை போட்டியிட்ட பவானிபூர் தொகுதியில் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து பாஜகவின் சுவேந்து அதிகாரி போட்டியிடுகிறார். இதனால் இருவருக்கும் இடையே கடும் போட்டி நிலவ வாய்ப்புள்ளது.

கடந்த 2021ல் நடந்த தேர்தலில் நந்திகிராம் தொகுதியில் போட்டியிட்ட மம்தாவை, பாஜக சார்பில் போட்டியிட்ட சுவேந்து அதிகாரி தோற்கடித்தார்.

# "வாக்காளர்களே கவனிங்க! தேர்தல் நேரத்துல பட்டாசு வெடிக்க புதுச்சேரி தடை போட்டாச்சு




புதுச்சேரி மார்ச் 19-

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் 2026 அமைதியாகவும், பாதுகாப்பாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், மாவட்ட நிர்வாகம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, தேர்தல் காலங்களில் பட்டாசுகள் மற்றும் வெடிபொருட்களைப் பயன்படுத்த மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் அதிரடித் தடை விதித்துள்ளார்.

வாக்கு எண்ணிக்கை சமயம்: மே 2, 2026 முதல் மே 5, 2026 வரை மேற்கண்ட தேதிகளில் புதுச்சேரி மாவட்டம் முழுவதும் பட்டாசுகள் தயாரித்தல், விற்பனை செய்தல், ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லுதல் மற்றும் வெடித்தல் ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பட்டாசு மற்றும் வெடிபொருட்கள் வைத்திருக்க வழங்கப்பட்ட அனைத்து உரிமங்களும் (Licenses) இந்த குறிப்பிட்ட தேதிகளில் தற்காலிகமாக ரத்து செய்யப்படுகின்றன.

இந்த ஆணையை மீறி யாரேனும் செயல்பட்டால், இந்திய வெடிபொருள் சட்டம் மற்றும் உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் கடும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

# கொடைக்கானலில் பரவும் காட்டுத் தீ வனத்துறை நடவடிக்கை எடுக்க கோரிக்கை



கொடைக்கானல், மார்ச்.19-

கொடைக்கானலில் பரவும் காட்டுத் தீயை கட்டுப்படுத்த வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் கடந்த சில மாதங்களாக மழையின்றி வறண்ட சூழல் நிலவி வருகிறது. இதனால், வனப்பகுதியை ஒட்டியுள்ள விளைநிலங்களில் செடி, கொடி உள்ளிட்ட தாவரங்கள் அனைத்தும் காய்ந்து கிடக்கின்றன.

இந்த நிலையில் கொடைக்கானல் பேத்துப்பாறையை அடுத்த புலியூர், பாரதி அண்ணா நகர், அஞ்சு வீடு உள்ளிட்ட பகுதிகளில் வனப்பகுதியை ஒட்டி உள்ள நிலப் பகுதியில் காட்டுத்தீ பரவி எரிந்து வருகிறது. இதைக் கட்டுப்படுத்தாவிட்டால், ஒட்டியுள்ள வனப்பகுதியிலும் பரவும் அபாயம் உள்ளது. பல ஏக்கர் பரப்பளவில் காட்டுத் தீ பரவி கரும்புகை வெளியேறி வருகிறது. எனவே, காட்டுத் தீயை கட்டுப்படுத்த வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சென்னை கோயம்பேட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் வரும் 23ம் தேதி தேமுதிக மாவட்ட செயலாளர்கள் கூட்டம்

சென்னை, மார்ச்.19-



சென்னை கோயம்பேட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் வரும் 23ம் தேதி தேமுதிக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற உள்ளது. தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா தலைமையில் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

# சமூகக் குற்றங்களைத் தடுக்க மனநலமே மருந்து ஒட்டன்சத்திரம் அரசு கல்லூரி விழாவில் அறிஞர்கள் பேச்சு



ஒட்டன்சத்திரம் மார்ச். 19-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பில், தமிழ் இலக்கிய மன்ற விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

*தலைமை மற்றும் வரவேற்பு:*

கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கு. பாலுசாமி விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு) முனைவர் அ. பிரேமா விழாவிற்குத் தலைமை தாங்கி, தலைமையுரையாற்றினார்.

*சிறப்பு விருந்தினர் உரை:*

விழாவில் சிறப்பு விருந்தினராக அருள்மிகு பழனியாண்டவர் கலை பண்பாட்டுக் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க. கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டார். அவர் 'மனநலம்' என்னும் தலைப்பில் மாணவர்களிடையே சிறப்புரையாற்றினார். அவரது உரையின் முக்கியக் கருத்துக்கள்:

மனிதர்கள் மனநலமாக இருந்தால், சமூகத்தில் தேவையற்ற குற்றச் செயல்கள் நடைபெறாது. சமூகக் குற்றங்களுக்கு அடிப்படை காரணமாக அமைவது மனிதர்களின் மனப்பயமும், முறையற்ற மனநலமுமே ஆகும்.

*பங்கேற்பாளர்கள்:*

இவ்விழாவில் 200க்கும் மேற்பட்ட இளங்கலைத் தமிழ் இலக்கிய மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மேலும், கல்லூரியின் கௌரவ விரிவுரையாளர்கள் முனைவர் பா. முருகேஸ்வரி, முனைவர் ம. விமலா, முருகவள்ளி, முனைவர் செல்வி உள்ளிட்டப் பல பேராசிரியர்கள் பங்கேற்று விழாவைச் சிறப்பித்தனர்.

விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்த்துறையினர் சிறப்பாகச் செய்திருந்தனர். நிகழ்ச்சியின் நிறைவாக, முனைவர் விமலா அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

# திருப்பரங்குன்றம் தீபம் தொடர்பான அவமதிப்பு வழக்கில் தனி நீதிபதி உத்தரவுக்கு இடைக்கால தடை



மதுரை, மார்ச்.19-

திருப்பரங்குன்றம் கார்த்திகை தீப வழக்கு தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளில் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுகளுக்கு ஏப்.8ம் தேதிவரை இடைக்கால தடை விதித்து உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டுள்ளது.

திருப்பரங்குன்றம் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என்ற தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்தும், நீதிமன்ற அவமதிப்பு மனுக்களில் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு எதிராகவும் அரசுத் தரப்பில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனை விசாரித்த இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு, ஒவ்வோர் ஆண்டும் கார்த்திகை தீப நாளில் தீபத்தூணில் கோயில் நிர்வாகம் தீபம் ஏற்ற வேண்டும் என ஜன.6ம் தேதி உத்தரவிட்டது. நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கு எதிரான மேல்முறையீடு மனுக்கள் நிலுவையில் இருந்தன.

இதனால் நீதிமன்ற அவமதிப்பு மனுக்களை தனி நீதிபதி தொடர்ந்து விசாரணை நடத்தி பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்து வந்தார். இந்த மனு கடந்த மார்ச் 4ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, உயர் நீதிமன்றம் நியமிக்கும் 5 பேர் கொண்ட குழு மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் வழிபாடு நடத்த அனுமதிப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் பதிலளிக்க வேண்டும்.

மேலும் இதுதொடர்பாக மார்ச் 18ம் தேதி மதுரை மாநகர காவல் ஆணையர் லோகநாதன், துணை ஆணையர் இனிகோ திவ்யன் ஆகியோர் தகுந்த பதில் அளிக்க வேண்டும். தவறினால் அவர்கள் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்படும் என உத்தரவிட்டு அடுத்தகட்ட விசாரணையை தள்ளிவைத்திருந்தார்.

இந்த வழக்கு தனி நீதிபதி முன்பு இன்று (மார்ச் 18) விசாரணைக்கு வரவுள்ள நிலையில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளில் தனி நீதிபதியின் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீடு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தன.

அப்போது அரசுத் தரப்பில், நீதிமன்றம் பரிந்துரைக்கும் 5 பேரை தீபத்தூண் அருகே பூஜை செய்ய அனுமதிப்பது தொடர்பாக தெரிவிக்கக் கூறப்பட்டுள்ளது. இந்த அவமதிப்பு வழக்கில் புதிய நபர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.


இது உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு எதிரானது. இதற்கு எதிராகவும் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதையும் விசாரிக்க வேண்டும் எனக் கோரப்பட்டது.

அப்போது நீதிபதிகள், அதை அனுமதிப்பதில் என்ன சிக்கல் இருக்கப் போகிறது, 5 நபர்களை பூஜை செய்ய அனுப்புவது பிரச்சினையாக இருந்தால் கோயில் சார்பில் பூஜை செய்யலாமே, இது சிறிய விஷயம்தானே. இதை செய்து மற்ற பிரச்சினைகளை தவிர்க்கலாமே என்றனர்.

அதற்கு அரசு தரப்பில், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் 2 உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதிகாரத்தை மீறி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நீதிபதிகள், நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் உத்தரவுவிவரங்களை அரசுத் தரப்பில் தாக்கல் செய்ய வேண்டும். அது வரை நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளில் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுகளுக்கு இடைக்கால தடை விதிக்கப்படுகிறது. விசாரணை ஏப்.8க்கு தள்ளிவைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

# தென்காசி அருகே தெருநாய் கடித்து 9 பேர் காயம்



தென்காசி, மார்ச்.19-

புளியங்குடி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தெருநாய் கடித்து 9 பேர் காயமடைந்தனர். தெருநாய்களை பிடித்து அப்புறப்படுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்



# திருப்பூரில் சமத்துவ இஃப்தார் விழா மும்மதத் தலைவர்கள் பங்கேற்பு

திருப்பூர், மார்ச்.19-

திருப்பூரில் தலைமையாகக் கொண்டு தமிழக முழுவதும் பொது மக்களுக்காகவே சேவை செய்து வரும் இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில், திருப்பூர் காங்கேயம் சாலையில் உள்ள தனியார் திருமண மஹாலில் மும்மதத்தினர் பங்கேற்ற இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சமத்துவத்தை போற்றும் விதத்தில் பங்கேற்று சிறப்பித்தனர். கலந்து கொண்ட அனைவருக்கும் கிப்ட் வழங்கப்பட்டது.

இதில் நிறுவனத் தலைவர் இந்திராசுந்தரம். செயலாளர் ராஜா முகமது. விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தனர் இதில் மௌலவி முஃப்தி. உமர் பாரூக் மழாஹிரி தலைமை இமாம் மஸ்ஜிதே நூர் வட்டார ஜமாஅத்துல் உலமா சபை தலைவர் திருப்பூர். ஆன்மீக சொற்பொழிவாளர் சபாபதி. பாதிரியர். பிலிக்ஸ் ஆகிய மும்மத தலைவர்கள் பங்கேற்ற விழா வெகு சிறப்பாக நடைபெற்றது



# நள்ளிரவில் எல்லையில் அதிரடி புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் 'சர்ப்ரைஸ்' விசிட்

புதுச்சேரி மார்ச் 19-

2026 சட்டமன்றத் தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டு, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மாதிரி நடத்தை விதிகள் (M.C.C) அமலில் உள்ள நிலையில், புதுச்சேரி மாவட்ட நிர்வாகம் தேர்தல் பணிகளை முடுக்கிவிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, ஆட்சியரும், மாவட்டத் தேர்தல் அதிகாரியுமான குலோத்துங்கன், இரவு மாநில எல்லைப் பகுதியான காலப்பட்டு சோதனைச்சாவடிக்குத் திடீர் வருகை தந்து ஆய்வு மேற்கொண்டார். அங்கிருந்த பறக்கும் படையினர் மற்றும் காவல்துறையினர் மேற்கொண்டு வரும் வாகன சோதனைகளைப் பார்வையிட்ட அவர், பணிகளின் வேகம் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

*ஆட்சியரின் அதிரடி உத்தரவுகள்:*

வாகன சோதனையில் ஈடுபடும்போது, அந்த நிகழ்வுகள் அனைத்தையும் எவ்விதத் தவறும் இன்றி வீடியோவில் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும். அதே நேரத்தில், வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்களுக்கு எவ்விதத் தேவையற்ற சிரமங்களும் ஏற்படாத வகையில் கண்ணியத்துடன் செயல்பட வேண்டும். சோதனைச்சாவடியில் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் பராமரிக்கப்படும் ஆவணங்களை ஆய்வு செய்த அவர், தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளை 100% பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தினார்.

தேர்தல் பணிகளில் எவ்விதத் தொய்வும் ஏற்படாத வகையில், மிகுந்த பொறுப்புணர்வுடனும் விழிப்புணர்வுடனும் பணியாற்ற வேண்டும் எனப் பாதுகாப்புப் பணியில் இருந்த குழுக்களுக்கு அவர் கட்டளையிட்டார்.



■ தேனி மாவட்டம் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறுவது முன்னிட்டு, 201 கம்பம் சட்டமன்றத் தொகுதி உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தேர்தல் தொடர்பான முன்னேற்பாடு பணிகளை, மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத்சிங் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.




■ திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தமிழ்நாடு புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தேர்தல் 2026 நடைபெற உள்ளதையொட்டி, தூத்துக்குடி திருநெல்வேலி தென்காசி கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இருந்து கழகத்தின் சார்பில், வேட்பாளர்களாக போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்தவர்களுடன் நேர்காணல் நடத்தினார். அதில் திசையன்விளையிலிருந்து ஜான் ரவீந்தர் திருநெல்வேலி மாவட்ட திமுக மகளிர் அணி துணை அமைப்பாளர் ஆறுமுக தேவி லிங்கராஜ் மாவட்ட மகளிர் அணி தலைவி கமலா நேரு, திமுக முன்னாள் நகர செயலாளர் அன்பழகன், திமுக பிரமுகர்கள் நெல்சன், கவுன்சிலர் நடேஷ், அரவிந்த் உட்பட திசையன்விளை சார்ந்த பல திமுக பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# அதிமுகவிற்கு 'டாட்டா'... திமுகவிற்கு ஆதரவு! அதிரடி காட்டும் ஜனநாயக மக்கள் நீதி கழகம்

சென்னை மார்ச் 19-

2026 சட்டமன்றத் தேர்தல் நெருங்கும் வேளையில், தமிழக அரசியல் களத்தில் கூட்டணிக் கணக்குகள் வேகமாக மாறி வருகின்றன. அந்த வகையில், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுகவிற்கு ஆதரவு அளித்த ஜனநாயக மக்கள் நீதி கழகம், தற்போது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு (திமுக) தனது ஆதரவைத் தெரிவித்து அதிரடி முடிவை எடுத்துள்ளது.



இது குறித்து ஜனநாயக மக்கள் நீதி கழகத்தின் நிறுவனத் தலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: "கடந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலின் போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு (ADMK) நாங்கள் ஆதரவு அளித்திருந்தோம். தற்போது அதிமுகவிற்கு அளித்து வந்த அந்த ஆதரவை அதிகாரப்பூர்வமாகத் திரும்பப் பெறுகிறோம் (Withdraw) என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்."

வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு (DMK) எங்களது ஜனநாயக மக்கள் நீதி கழகம் மற்றும் சமூக நீதிக்கான மக்கள் கூட்டமைப்பு சார்பில் முழுமையான ஆதரவை வழங்க முடிவு செய்துள்ளோம். சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்களைச் சந்தித்த வேல்முருகன், தனது கட்சியின் அதிகாரப்பூர்வ ஆதரவு கடிதத்தை வழங்கினார்.



# பசி உணர்ந்து ஏழைகளுக்கு உதவுவதே நோன்பின் நோக்கம் திருப்பூர் இக்லாஸ் பள்ளிவாசல் ரமலான் வாழ்த்து

திருப்பூர் மார்ச். 19-

15. வேலம்பாளையம் இக்லாஸ் பள்ளிவாசல் மற்றும் சமூக நல அறக்கட்டளை தலைவர் நிர்வாகிகள்

வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்கூறியிருப்பதாவது. புனித ரமலான் மாதம் என்பது இஸ்லாமியர்களுக்காக ஏக இறைவனான அல்லாஹுதாலா வினால் வழங்கப்பட்ட மிகப் பெரிய வெகுமதியாகும். ஆண்டு முழுவதும் ரமலானாகவே இருக்க வேண்டும் என விரும்புவார்கள் என ஓர் ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தகைய சிறப்பு வாய்ந்த மாதம் ரமலான் ஆண்டு முழுவதும் நோன்பு நோற்பது சிரமமான காரியம்தான் என்றாலும், புனித ரமலான் மாதத்தில் கிடைக்கின்ற நன்மைகளைக் கருத்தில் கொண்டு மனிதர்கள் அதனை விரும்புவார்கள் என்பதாக முகமது நபி(ஸல்) அருளியிருக்கின்றார்கள். ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதும்ஞ் ஒவ்வொரு மாதமும் மூன்று நோன்புகள் நோற்பதும் உள்ளத்தின் அழுக்குகளையும் , மன ஊசலாட்டங்களையும், நீக்கி விடும் என ஓர் ஹதீஸில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோக்கம், மாலை வரை பசி தெரியாமல் இருக்க ஸஹர் நேரத்தில் பால் இனிப்பு வகைகள் ஆகாரங்கள் ஆகியவற்றைக் கொண்டு குடலை நிரப்பாமல் இருப்பதில்தான் உண்டாக முடியும். ஏழைகளுக்கு ஒப்பாக இருத்தல் என்பது கொஞ்சம் நேரம் பசித்திருப்பதின் மூலமே சாத்தியமாகும் என தலைவர் அப்துல் சமது. செயலாளர் ரபீக், பொருளாளர் சித்திக் மற்றும் நிர்வாகிகள் தெரிவித்தனர்.



■ சேலம் மாநகராட்சி மைய கட்டிடத்தில் 90 தெற்கு சட்டமன்ற தொகுதிகள் தேர்தல் நடத்தும் அலுவலர் டாக்டர். மா. இளங்கோவன் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகளுடன் 2026 ம் ஆண்டு சட்டமன்ற பொது தேர்தல் நடத்தை விதிமுறைகள் தொடர்பாக ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. உடன் 89 வடக்கு சட்டமன்ற தொகுதிகள் தேர்தல் நடத்தும் அலுவலர் மு. கோட்டை குமார், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தமிழ்வேந்தன் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து பணியிட மாறுதலில் சென்னை மாவட்டத்தில் நில அளவை உதவி இயக்குனராக பதவியேற்றுள்ள ராஜ்குமார், தமிழ்நாடு நில அளவைத்துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பாக வரவேற்று வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் சங்கத்தின் மாநில தலைவர் மகேந்திர குமார் தலைமையில் மாநிலத் தலைமை நிலை செயலாளர் அந்தோணி அமல்ராஜ்,மாநிலத் துணைத் தலைவர் பெருமாள், மாவட்ட பொறுப்பாளர் செந்தில்நாதன், மாவட்ட நிர்வாகிகள் ரஞ்சித் , கார்த்திக், சுகைல் , சதீஷ் பாண்டியன், பிரகாசம், சாமுண்டீஸ்வரி, அருண்குமார் மற்றும் தனசேகர் ஆகியோர் கலந்துகொண்டு உதவி இயக்குனருக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.



















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000